பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான

இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது!

ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பி.வில்சன் எம்.பி. பேச்சு!

நியூயார்க் , அக். 31 -

“பெண்கள், அமைதி, பாதுகாப்புத் திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது” என்று இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினர் பி.வில்சன் நியூ யார்க்கில் நடைபெற்ற ஐ.நா. சபையின் அமைதி நிறுவல் ஆணையக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த அமைதி நிறுவல் ஆணையத்தின் தூதர் மட்டக் கூட்டத்தில் பங்கேற்ற இந்தியாவின் நிலைப்பாட்டு அறிக்கை குறித்து மாநிலங்களவை உறுப்பினர், மூத்த வழக்கறிஞர், பி. வில்சன் பேசியதாவது:

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325ன் 25ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி இன்றைய நிகழ்வை ஒருங்கிணைத்ததற்காக, அமைதி நிறுவல் ஆணையத்தின் தலைமை ஜெர்மனிக்கு இந்தியா தனது பாராட்டுகளை தெரிவிக்கின்றது. பெண்கள் சமத்துவத்திற்காக நமீபியா அமைச்சரும், ஐ.நா. மகளிர் அமைப்பின் நிறைவேற்று இயக்கு நரும், மற்றும் மற்ற உரையாளர்களும் தங்களது ஆழமான கருத்துகளையும், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தை மேலும் வலுப்படுத்த உதவும் மதிப்புமிக்க பங்களிப்பு களையும் வழங்கியதற்காக நன்றி தெரிவிக்கிறோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான முன்னணி பங்களிப்பாளர்களில் ஒன்றாக இருக்கும் இந்தியா, அமைதியை உருவாக்குவதற்கும் நிலை நிறுத்துவதற்கும் பெண்களின் முழுமையான மற்றும் சமமான பங்கேற்பு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகிறது. அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவல் மீதான எங்கள் அர்ப்பணிப்பு, தேசிய உரிமை மற்றும் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) நோக்கங்களின் கொள்கைகளுடன் இணை ந்துள்ளது.

அமைதிக்காப்பு அத்தியாவசிய மானவை!

இந்தியாவின் அமைதிக்காப்பு பாரம்பரியத்தை தனித்துவமாக ஆக்கும் அம்சம் எங்கள் பங்களிப்பின் அளவில் மட்டும் இல்லை, நிலைத்த

அமைதிக்கான இன்றியமையாத செயற்பாட்டாளர்களாக பெண்களை முன்கூட்டியே அடையாளம் கண்டது என்பதிலும் இருக்கிறது.

பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானம் 1325 பிறக்கும்முன்பே, 1960களில் இந்திய பெண் மருத்துவ அதிகாரிகள் காங்கோவில் பணியாற்றினர். இது, ஐ.நா. அமைதிப்படைநடவடிக்கைகளில் பெண்கள் பங்கேற்ற முதன்மையான நிகழ்வுகளில் ஒன்றாகவும் பதிவாகிறது. இது ஒரு குறியீட்டு நடவடிக்கை மட்டுமல்ல; மாறாக, பெண்களின் பார்வை, திறன்கள், மற்றும் அவர்களின் பங்கு பயனுள்ள அமைதிக்காப்பு மற்றும் அமைதி நிறுவலிற்கு அத்தியாவசியமானவை என்பதைக் கண்கூடாக அங்கீகரிக்கிறது.

2007 ஆம் ஆண்டு, இந்தியா ஐ.நா.வின் முதல் முழு பெண்கள் கொண்ட காவல் படை பிரிவை (Formed Police Unit) லைபீரியாவிற்கு அனுப்பியது. இந்த முன்னோடியான முயற்சி, அந்நாட்டின் உள்ளூர் பெண்களை தங்கள் தேசிய காவல் மற்றும் பாதுகாப்பு சேவைகளில் சேர ஊக்குவித்தது. இன்று, இந்திய பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகள் காங்கோ ஜனநாயகக் குடியரசு, அப்யேய் மற்றும் தென் சூடான் ஆகிய இடங்களில் சிறப்பாக பணியாற்றி வருகின்றனர். அவர்கள் சமூகங்களுடன்நம்பிக்கையைஉருவாக்குவதிலும், பாலின அடிப்படை யிலான வன்முறையைத் தடுக்கவும், பொதுமக்கள் பாதுகாப்பை வலுப்படுத்த வும் முக்கிய பங்கு வகித்து வருகின்ற னர்.

இவ்வாறான பணியமர்வுகளின் மூலம், அமைதிக்காப்பு மற்றும் அமைதிநிறுவலில் பெண்கள் வழங்கும் நேர்மையான பங்களிப்பு மற்றும் தாக்கத்தை இந்தியா வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள், சமூகங்களில் நம்பிக்கையை உருவாக்கி, குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நம்பிக்கையை அளிக்கின்றனர். மிக முக்கியமாக, அவர்கள் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்கொள்ளவும், அமைதிக்கான வழிமுறைகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் தேவைகள் மற்றும் பார்வைகளை பிரதிபலிக்கவும் உதவுகின்றனர். அத்துடன், மோதல் நிலப்பரப்புகளில் உள்ள பெண்களுக்கு, அவர்களும் தலைவர்களாகவும், அமைதி நிறுவர்களாகவும் ஆக முடியும் என்பதற்கான உதாரணமாக திகழ்கின்றனர்.

சமூக ஒற்றுமை ஒன்றிணைந்த ஆட்சி!

தேசிய அளவில், பெண்கள் முன்னேற்றத்திலிருந்து பெண்கள் தலைமையிலான முன்னேற்றம் என்ற இந்தியாவின் பயணம், எங்கள் சமூகத்தின் ஒவ்வொரு துறையையும் மாற்றியுள்ளது. இன்று, அடிப்படை மட்டத்தில் 14 இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக பணியாற்றுகின்றனர். மேலும், 23க்கும் மேற்பட்ட இந்திய மாநிலங்களும் ஒன்றிய பிரதேசங்களும், உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்கி உள்ளன. இது, சமூக ஒற்றுமை மற்றும் ஒன்றிணைந்த ஆட்சி ஒன்றை ஒன்று பூர்த்தி செய்யும் அம்சங்கள் என்பதை வலியுறுத்துகிறது.

இந்தியா, பெண்களுக்கான திறன் மேம்பாட்டு முயற்சிகளில், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலிருந்து வரும் அமைதிப்படைப் பணியாளர்களுக்காக, தொடர்ந்து முதலீடு செய்து வருகிறது. புது டெல்லியில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைதிக்காப்பு மையம் (Centre for United Nations Peacekeeping), இன்று பாலின உணர்வுமிக்க பயிற்சிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த மையமாக உருவெடுத்துள்ளது.

அது, பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக முக்கிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்தி, அவர்களுக்கு இயக்கத்திட்டமிடல், பொதுமக்கள் பாதுகாப்பு, பாலியல் சுரண்டல் மற்றும் வன்முறைத் தடுப்பு, பாலின உணர்வுமிக்க தலைமைத்துவம் போன்ற துறைகளில் அத்தியாவசிய பயிற்சிகளை வழங்குகிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில், இந்தியா உலக தெற்கு நாடுகளிலிருந்து பெண்கள் அமைதிப்படை வீராங்கனைகளுக்காக நடத்தப்பட்ட முதல் வகையான சர்வதேச மாநாட்டை நடத்தி வரலாறு படைத்தது.

எதிர்காலத்தை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு (WPS) திட்டத்தின் மீதான இந்தியாவின் அர்ப்பணிப்பு அசைக்க முடியாததாக உள்ளது. இந்தியா தனது கூட்டு நாடுகளுடன், குறிப்பாக உலக தெற்கு நாடுகளிலுள்ளவர்களுடன், தனது அறிவு, பயிற்சி, மற்றும் தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொண்டு, பொதுவான சவால்களுக்கு கூட்டாக தீர்வுகளை உருவாக்குவதில் தயாராக உள்ளது.

இவ்வாறு பி.வில்சன் எம்.பி. அவர்கள் பேசினார்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

இள.புகழேந்தி தலைமை!

கடலூர், அக். 31 -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம், 29.10.2025, புதன் கிழமை, மாலை 6 மணியளவில், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ துரை.கி.சரவணன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், தொகுதி பார்வையாளர்கள் சுவை.சுரேஷ், விஜயன் ராமகிருஷ்ணன், எம்.எம்.சிவா, அ.பாரிபாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

தமிழகம் தலைகுணியாது,

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ,செயல் திட்டத்தில் தீவிரமாக பணியாற்ற வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட கழக துணை செயலாளர்கள்: அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல்,

ஒன்றிய கழக செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன், குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, திருமுட்டம் கிழக்கு தங்க.ஆனந்தன், திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கே.கோவிந்தராஜ், திரு முட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய மு.வெற்றிவேலு , கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப் பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, கீரப் பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் வடக்கு பா.திருமா வளவன், கம்மாபுரம் மத்திய பி.சுந்தர பாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள், பரங்கிப் பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப் பேட்டை மத்திய எம்.மனோகரன், குமராட்சி மத்திய வி.ஆர்.ராஜேந்திர குமார், குமராட்சி மேற்கு என்.கே.நடராஜன்,

குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, கடலூர் மத்திய கே.மகேஷ், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி ஆசிரியர் சின்னமணி, தருமர் பழனிசாமி,

கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜய ராகவன், இரா.தமிழரசன், ச.கல்யாண சுந்தரம், மு.வெற்றிவேல், என்.டி.கணேசன், மஞ்சு, பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், திருமுட்டம் பூ.செல்வகுமார், அண்ணாமலை நகர்க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர்சதாத், பரங்கிப் பேட்டை பொறுப்பு தேன்மொழி சங்கர்,

மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞர் அணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சத்தியநாராயணன், பொறியாளர் அணி அப்பு சந்திரசேகரன், தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், விவசாய தொழிலாளர் அணி ம.இராமசாமி, மகளிர் அணி த.அமுதராணி, மகளிர் தொண்டரணி, ப.மனோரஞ்சிதம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு எம்.எஸ்.முகமது யூனூஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், தொழுச பி.பழனிவேல், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி வாசு, தொழிலாளர் அணி கி.தண்டபாணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவக்கொழுந்து, இலக்கிய அணி வி.சி.சண்முகம், டி.வெங்கடாஜலபதி, நெசவாளர் அணி ப.நல்லதம்பி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன், சுற்றுசூழல் அணி ஆர்.மணிவண்ணன்,

தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், கோ.பா.கௌதமன், ப.பிரவின்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாளை நடைபெறுகிறது

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, அக். 31-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க, அவசர செயற்குழுக் கூட்டம் நாளை (01.11.2025 - சனிக் கிழமை) மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் A.K.சுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட தி.மு.க அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: நவம்பர் 3, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டம் வருகை குறித்து

வாக்காளர் சிறப்பு சுருக்க திருத்தம் (S.I.R) பணிகள் குறித்து

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

மேற்கண்டவாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆர்.காந்தி அறிவித்துள்ளார்.

விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி

BLA2, BDA, தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், அக். 31 -

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. விழுப்புரம் தொகுதி BLA2, BDA, தேர்தல் பணிக்குழு ஆலோசனைக் கூட்டம் இன்று (31.10.2025 -வெள்ளிக் கிழமை) காலை 9.00 மணிக்கு விழுப்புரம் கிழக்கு பாண்டி, ஜெய சக்தி திருமண மண்டபத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற உள்ளது.

எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டங்களில், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் திருமிகு. துரை.கி.சரவணன் கலந்துகொண்டு முன்னிலை வகிக்கவுள்ளார்கள்

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,

பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும்

துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் BLA2, BDA, தேர்தல் பணிக்குழு, உள்ளாட்சி பிரதி நிதிகள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேனி வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன். எம்.பி. அறிக்கை!

தேனி, அக். 31 -

தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன்.எம்.பி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதல மைச்சர் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் 29102025 அன்று சென்னையில் நடைபெற்ற `என் வாக்கு சாவடி வெற்றி வாக்குசாவடி' கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி தேனி வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம்

இன்று (31.10.2025.வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் தேனி என்.ஆர்.டிமஹாலில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர் கழக, பேரூர், வார்டு, கிளைக்கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA 2), பாக கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள்,அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.சிறப்புதீவிர வாக்காளர்திருத்தம். தொடர்பாக

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தேனி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி வேண்டுகோள் விடு த்துள்ளார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழுக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் நிர்வாகிகள் இள.புகழேந்தி, கார்த்திகேயன், டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், செஞ்சி சிவா, ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், விஜயகுமார், நெடுஞ்செழியன் உள்ளனர்.

NRTIA பஹ்ரைனின் -முப்பெரும் விழா!

பக்ரைன், அக். 31 -

NRTIA அமைப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் NRTIA பஹ்ரைன் சார்பில் முப்பெரும் விழா நடைபெற உள்ளது. இப்பெரும் விழாவில் இந்த விழாவில் இந்தியாவிலிருந்து வருகை தரும் சிறப்பு விருந்தினர்கள்: தி. மு.க. அயலக அணி செயலாளர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா மற்றும் அயலக அணி துணை செயலாளர் எழும்பூர் தொகுதி 99 மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி கலந்துகொள்கின்றனர்.

இந்த விழா இன்று (2025 -அக்டோபர் 31, வெள்ளிக் கிழமை), மாலை 6:00 மணிக்கு மனாமாவில் நடைபெறும். இந்த மகிழ்ச்சியான நிகழ்வில் அனைத்து NRTIA உறுப்பினர்களும் கலந்து கொண்டு, இந்த முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்திட உடன் பிறப்புகள் அழைக்கப்படுகிறார்கள்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்புற ஏற்பாடு செய்துள்ள NRTIA- பஹ்ரைன்.

துணை அமைப்பாளர்கள் சுல்தான் இப்ராஹிம், கருணாநிதி, கபீர் அகமது, எரிச்சி ரவிச்சந்திரன், மன்னை முபாரக், திருமேனி நடராஜன், வேம்பு ராஜ், சதீஷ்குமார், லலித் குமார், சபீக் மீரான் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதிகளில்

வாக்குச்சாவடி முகவர்கள் (BLA - 2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம்!

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! என்.இளையராஜா - மன்னை த.சோழராஜன் - மு.தினேஷ்குமார் முன்னிலை!

மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை மாவட்டத்திற்குட்பட்ட மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் கழகத் தலைவர், தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) ஆலோசனை மற்றும் பயிற்சி கூட்டம் கீழ்க்கண்ட விபரப்படி அந்தந்த சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட இடங்களில் 31.10.2025, 1.11.2025 ஆகிய இரண்டு நாற்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெற உள்ளது. தொகுதியில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதி பார்வையாளர்களான என்.இளையராஜா, மன்னை த.சோழராஜன், மு.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்த கூட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

நாள்	தொகுதி	இடம்
31.10.2025 மாலை 5.00	பூம்புகார்	பாலாஜி திருமண மண்டபம். நல்லாடை
1.11.2025 காலை 10.00	சீர்காழி	இந்திரபவன் திருமண மண்டபம் வைத்தீஸ்வரன் கோயில்
1.11.2025 மாலை 5.00	மயிலாடுதுறை	ஆர்.ஜி.ஆர்.திருமண மண்டபம். நாகங்குடி

இக்கூட்டத்திற்கு தொகுதி பர்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,

2.SIR (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து.

3. கழக ஆக்கப்பணிகள்.

நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.,
செயலாளர்
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.